செய்தி வெளியீடு எண்:619 நாள்: 24.12.2016

செய்தி வெளியீடு

தமிழக அரசின் உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக இன்று (24.12.2016) சென்னை, மயிலாப்பூர் மண்டலத்தில் சிருங்கேரி மடம் சாலையில் நடைபெற்ற நுகர்வோர் குறைதீர் முகாமில் மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள் கலந்து கொண்டார்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் நுகர்வோர் மற்றும் குடும்ப அட்டைதாரர்களின் குறைகளை களையும் பொருட்டு, தமிழ்நாடு அரசின் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக, ஒவ்வொரு மாதமும் சனிக்கிழமையன்று குறைதீர் முகாம்கள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டின் அனைத்து தாலுகா மற்றும் சென்னை நகர மண்டலங்களில் குடும்ப அட்டைதாரர்கள் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல், முகவரி மாற்றம் மற்றும் உரிய ஆவணங்களுடன் புதிய குடும்ப அட்டை கோரும் விண்ணப்பங்கள் பெறுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முகாம் நடைபெறும் நாட்களில் மதியம் 1 மணி வரை பெறப்படும் மனுக்கள் மீது அன்று மாலைக்குள் தீர்வு காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் இன்று வரை, 5 இலட்சத்து 56 ஆயிரத்து 948 மனுக்கள் பெறப்பட்டு, 5 இலட்சத்து 35 ஆயிரத்து 972 மனுக்கள் மீது அன்றைய தினமே தீர்வு காணப்பட்டுள்ளது. இவற்றுள் சென்னை மாநகரில் மட்டும் செயல்படும் 17 மண்டலங்களில் 96 ஆயிரத்து 755 மனுக்கள் பெறப்பட்டதில் 85 ஆயிரத்து 980 மனுக்கள் மீது அன்றைய தினமே தீர்வு காணப்பட்டுள்ளது.

இம்முகாமில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குநர்/ முதன்மை செயலாளர் Dr.K.கோபால், இ.ஆ.ப., உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திருமதி. எஸ்.மதுமதி, இ.ஆ.ப., பாராளுமன்ற உறுப்பினர் Dr.J. ஜெயவர்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்.நட்ராஜ், விருகை என்.ரவி மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.